செ.வெ.எண்: 15/2021 நாள்: 06.09.2021

**திருப்பூர் மாவட்டம்**

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் இன்று (06.09.2021) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து வீட்டுமனைபட்டா மற்றும் முதியோர் உதவித் தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலைவசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 785 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, சமூகபாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. சிவகுமாரி, துணை ஆட்சியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**